# அளவற்ற பேரன்பு

டெரிக் பிரின்ஸ்

Originally published in English under the title
**"EXTRAVAGANT LOVE"**

Copyright © 1990 Derek Prince Ministries - International

Published by Derek Prince Ministries – India

Printed by Derek Prince Ministries

All rights reserved.

T123/TA/2000/0214/LOP
ISBN 978-81-89250-72-0

**"Extravagant Love" (Tamil)**
**"ALAVATRA PERANBU"**

No part of this book may be reproduced or transmitted in any form or by any means, electronic or mechanical, including photocopying, recording, or by means of any information storage and retreival system, without permission in writing from the publisher.

For orders & other enquiries please contact :
**DEREK PRINCE MINISTRIES - INDIA**
C/o DPM IMPEX
1C, EVR Road, Puthur,
Trichy - 620 017, Tamil Nadu, India.
E-mail: admin@derekprince.in
Phone : 00-91-98430 55414 / 95855 38201

Derek
Prince
MINISTRIES INDIA
www.derekprince.in

# பொருளடக்கம்


| | |
|---|---|
| முன்னுரை | 5 |
| 1. நிலத்திலுள்ள பொக்கிஷம் | 7 |
| 2. விலையேறப்பெற்ற முத்து | 13 |
| 3. இயேசு முழுக்கிரயத்தையும் செலுத்தினார் | 22 |
| 4. பூரண சுதந்தரிப்பு | 31 |
| 5. அளவுகடந்த அன்பைத் திருப்பிச்செலுத்துதல் | 37 |
| ஆசிரியரைப்பற்றி | 45 |

# முன்னுரை

*அளவற்ற அன்பு. தேவனை நீங்கள் துதிக்கும் போதும் அவருக்கு உங்கள் அன்பை வெளிப்படுத்தும் போதும் இது உங்களை ஒரு புதிய சூழ்நிலைக்குக் கொண்டுவரும். "அளவற்ற" என்ற இந்த வார்த்தை உங்களை ஆச்சரியத்தில் ஆழ்த்துகிறதல்லவா? இந்த வார்த்தை சரியானதே. ஏனெனில் இது தேவனுடைய அன்பை மாத்திரமே வெளிப்படுத்த பயன்படுத்தப்படும் வார்த்தையாகும்.*

*தேவனுடைய தன்மையே அன்பாகும். நாம் நினைப்பதற்கு மேலாக தேவன் மிகவும் பெரியவராக இருக்கிறார். அது போலவே அவருடைய அன்பைப் பற்றிக் கூறும் போதும் இது உண்மையாகவே உள்ளது. மனுஷீகமான அன்பானது அநேக முறை மிகவும் சிறியதாகவும், அற்பமானதாகவும் சுயத்தை மையமாகக் கொண்டதாகவும் காணப்படுகிறது. ஆனால் தேவனுடைய அன்போ பரந்து விரிந்தது. எல்லையற்றது. அளவிடமுடியாதது.*

*தேவனுடைய பிள்ளைகளுக்கு பவுல் எபேசியர்* ***3:14-19*** *இல் ஜெபித்த ஜெபம்:*

***"இதினிமித்தம் நான் பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழு குடும்பத்துக்கும் நாமகாரணராகிய,***

***நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழங்கால் படியிட்டு,***

***நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும்,***

***விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள்***

***இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலை பெற்றவர்களாகி,***

***சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து;***

***அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே உங்களுக்கு அநுக்கிரகம் பண்ண வேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறேன்.''***

*நாம் தேவனுடைய அன்பைப் புரிந்து கொள்ள வேண்டுமென்பதே பவுலுடைய ஜெபத்தின் நோக்கமாகும். பரிசுத்த ஆவியானவராலே நாம் பலப்படுத்தப்படும் வரை கிறிஸ்து நம்மில் வாசம் செய்ய முடியாது. நாம் அவருடைய அன்பில் கட்டப்படவும், அவருடைய அன்பின் அகலமும், நீளமும், உயரமும், ஆழமும் இன்னதென்று உணர்ந்து கொள்ளவும் வேண்டுமென்று பவுல் ஜெபிக்கிறார். "அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்து கொள்ள வல்லவர்களாகவும்" என்று பவுல் அறிவித்து முடிக்கிறார். இது முரண்பாடான காரியமாக உள்ளது. அறிவுக்கெட்டாத அந்த அன்பை நாம் எப்படி அறிந்து கொள்ள முடியும்? இதற்கு ஒரு பதில் உண்டு: நம்முடைய ஞானத்தினால் நாம் அதனை அறிந்து கொள்ளமுடியாது. வேத வாக்கியங்களின் மூலமாகவும் பரிசுத்த ஆவியானவர் மூலமாகவும் மட்டுமே இதனை நாம் அறிந்து கொள்ள முடியும். இந்த வெளிப்பாடு நமது மனத்தின் மூலமாக அல்ல நமது ஆவியினால் மட்டுமே அறிந்து கொள்ள இயலும்.*

*தேவனுடைய அன்பின் ஆழத்தை எப்படி அளக்க முடியும் என்பதற்கு உரிய வேத பகுதிகளைக் கூறி விளக்குவதே இந்த புத்தகத்தின் நோக்கமாகும்.*

1

# *நிலத்திலுள்ள பொக்கிஷம்*

*இப்பொருள் குறித்த முதல் வேத பகுதி, மத்தேயு **13:44**ல் இயேசு கூறிய ஒரு உவமையாகும். இது நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த பொக்கிஷத்தைப் பற்றியதாகும்.*

*உவமை என்பது அனைவருக்கும் தெரிந்த உலகப் பொருளைக் குறித்துக் கூறப்படும் ஒரு கதையாகும். இயேசு கூறிய உவமைகளில் வரும் பொருட்கள் யாவும் கேட்பவர்களுக்குத் தெரிந்தவைகளாகவே அமைந்திருந்தன. ஆனால் அப்படிப்பட்ட உவமை மூலமாக காணப்படாத நித்தியமான ஆவிக்குரிய காரியத்தை வெளிப்படுத்துவதே அதன் நோக்கமாகும். அனைவருக்கும் தெரிந்த அந்தக் காட்சியும் கதையும் காணப்படாத, பழக்கப்படாத ஆவிக்குரிய காரியங்களைப் படம் பிடித்துக் காட்டும் கண்ணாடியாக அது அமைகிறது.*

*இயேசு ஒரு நல்ல ஆசிரியரைப் போன்று தெரிந்ததைக் கொண்டு தெரியாததை விளக்குகிறார். அவரைக் கேட்போருக்குத் தெரிந்த காரியங்களைக் கொண்டு ஆரம்பித்து அவர்கள் அறிந்திராத காரியங்களை நோக்கி அவர்களை நடத்திச் செல்கிறார். ஒரு உவமையை நாம் படிக்கும்போது நம்மை நாமே கேட்டுக் கொள்ள வேண்டியது: இந்த உவமையில் கூறப்பட்டுள்ள உலகப் பிரகாரமான பொருட்களுக்கு நிகராகக் கூறப்படும் ஆவிக்குரிய காரியங்கள் யாவை? இந்த உவமையை நாம் பார்ப்போம். பின்பு அதைக்*

குறித்த விளக்கத்தை நான் உங்களுக்குக் கூறுவேன்.

***“அன்றியும், பரலோகராஜ்யம் நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷத்திற்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு மனுஷன் கண்டு, மறைத்து, அதைப் பற்றிய சந்தோஷத்தினாலே போய், தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, அந்த நிலத்தைக் கொள்ளுகிறான்.”***

இது மிகவும் இலகுவாக விளங்கிக் கொள்ளக் கூடிய ஒன்று. இந்தக் கதை நமக்கு என்ன ஆவிக்குரிய உண்மையை எடுத்துரைக்கிறது? வேத வாக்கியங்களினடிப்படையில் இது என்னுடைய சொந்த விளக்கமாகும். வேறு விளக்கங்களைப் பற்றி நான் கூறாமல் என்னுடைய சொந்த விளக்கத்தைக் கூறுகிறேன்.

பொக்கிஷத்தைக் கண்டுபிடித்தவர் இயேசு. நிலம் உலகம். மத்தேயு **13:38** இல் இது வேறு ஒரு உவமையில் கூறப்பட்டுள்ளது. மத்தேயு **13**இல் கூறப்பட்டுள்ள ஏழு உவமைகளிலும் இந்த உண்மை எடுத்துக் கூறப்பட்டுள்ளது. பொக்கிஷம் என்பது என்ன? அது இவ்வுலகத்திலுள்ள தேவனுடைய பிள்ளைகளைக் குறிக்கிறது. சுருக்கமாகக் கூறினால் அந்த மனிதன் இயேசு, அந்த நிலம் உலகம். அந்தப் பொக்கிஷம் இவ்வுலகத்திலுள்ள தேவனுடைய பிள்ளைகள்.

அந்த நிலத்தில் பொக்கிஷம் இருப்பதை அந்த மனிதன் அறிந்து கொண்டவுடன், அவன் மிகவும் ஞானமாக ஒரு காரியத்தைச் செய்கிறான். அந்த பொக்கிஷத்தைக் குறித்து யாரிடமும் கூறவில்லை. உண்மையில் அவன் அதை மறைக்கிறான். மற்ற மக்கள் அந்த நிலத்தில் பொக்கிஷம் இருப்பதைத் தெரிந்து கொண்டால் அந்த நிலத்திற்குக் கடும் போட்டி உண்டாகும். எனவே, அவன் அதை மறைத்து வைத்து அந்த முழு நிலத்தையும் வாங்கத் தீர்மானம் செய்கிறான். உண்மையில் அவனுக்கு அந்த நிலம் தேவையில்லை

என்பதை மனதில் கொள்ளுங்கள். அவனுக்குத் தேவை அந்த பொக்கிஷம். அந்த பொக்கிஷத்தை அடைய வேண்டுமென்றால் அவன் அந்த நிலத்துக்கான கிரயத்தைச் செலுத்த வேண்டும். அந்த நிலத்திற்கான கிரயம் மிகவும் அதிகம். அவனுடைய முழு சொத்தையும் கொடுத்து அதனை வாங்க வேண்டும். ஆனால் அதனை மகிழ்ச்சியோடு செய்கிறான். ஏனெனில் அவனுக்குக் கிடைக்கும் பொக்கிஷத்தின் மதிப்பு அவனுக்குத் தெரியும்.

உள்ளூர் மக்கள் அடைந்த ஆச்சரியத்தை உங்களால் உணர முடிகிறதா? "இந்த நிலத்தை எதற்காக வாங்குகிறான்? அது ஒன்றுக்கும் பயனற்றதாயிற்றே. அது எந்த விதத்திலும் மதிப்பற்ற நிலமாயிற்றே. அதில் பயிர் செய்யவும் முடியாது. முள்ளும் களைகளும் மாத்திரமே விளையக் கூடியது. இவ்வளவு அதிக விலை கொடுத்து அதை ஏன் வாங்கினான்?"

ஆனால் அதில் விலைமதிக்கமுடியாத பொக்கிஷம் இருப்பது அவர்களுக்குத் தெரியாது. அந்த பொக்கிஷத்தைப் பற்றித் தெரிந்தவர் இயேசு ஒருவரே. இந்த பொக்கிஷத்தைத் தான் பெறுவதற்காக உலகம் முழுவதற்கும் அதிக விலை கொடுத்து அவர் வாங்குகிறார். அந்த பொக்கிஷம் தேவனுடைய பிள்ளைகளாகும்.

இதையொத்த நம் அனைவருக்கும் தெரிந்த வேறு ஒரு வேத பகுதியை புதிய ஏற்பாட்டில் நாம் காணலாம்:

> *"**தேவன், தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.**"*
>
> ***(யோவான்3:16)***

தேவன் இந்த உலகத்தை நேசித்தபடியால் உலகத்தை மீட்கும் பொருட்டாக தம்முடைய

குமாரனுடைய ஜீவனைக் கொடுத்தார். ஆனால் இந்த உலகத்தில் அவருக்குக் கிடைப்பது 'எவனோ'. "தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகமாட்டான்" எவனோ என்பது போன்ற மக்களே, அவர் தமது ஜீவனைக் கொடுத்து சம்பாதித்த பொக்கிஷமாகும்.

தீத்து **2:14**இல் இதே கருத்து மீண்டும் கூறப்படுவதை நாம் காணலாம். இங்கே இயேசு கிறிஸ்துவைக் குறித்துப் பேசப்படுவதை நாம் வாசிக்கிறோம்.

***"அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக் கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்ய பக்தி வைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்"***

இந்த உலகத்தினின்று மீட்டெடுக்கப்பட்ட தமது மக்களே அந்த பொக்கிஷமாகும். அவர் நம்மை சகல அக்கிரமங்களினின்றும் மீட்டு, சுத்திகரித்து நற்கிரியைகளைச் செய்ய வைராக்கியமுள்ளவர்களாக மாற்றுகிறார். அதற்கான கிரயம்: அவரே, அவருக்கிருந்த அனைத்தும், அவர் எப்படியிருந்தாரோ அப்படியே. அவர் தமது ஜீவனை ஒப்புக்கொடுத்தார். மீட்கப்பட்ட மக்களாகிய அந்த பொக்கிஷத்தைப் பெறுவதற்காக அவரையே தந்து அந்த நிலத்தை வாங்குகிறார்.

இந்த நிலத்திலுள்ள பொக்கிஷம் குறித்து வேறு ஒரு கருத்தும் உண்டு. இயேசு அந்த நிலத்தை வாங்குகிறார். ஆனால், அந்த நிலத்தை அவருடைய ஊழியக்காரர்களாகிய சுவிசேஷ வேலை செய்கிறவர்களிடம் கொடுத்து அந்த பொக்கிஷத்தை மீட்கச் சொல்லுகிறார். இதற்காகக் கடினமாக உழைக்க வேண்டியுள்ளது. நிலத்தைத் தோண்டிப் பார்த்து அந்த பொக்கிஷம் எங்குள்ளது எனக் கண்டுபிடித்து

நிலத்திலிருந்து அதனை எடுக்க வேண்டும். நிலத்துக்குள்ளேயே வெகு நாட்களாக இருப்பதால் அது துருப்பிடித்து அழுக்கடைந்து அரித்துப் போய் இருக்கிறது. எனவே அதனை நன்கு சுத்தம் செய்ய வேண்டும்.

இயேசு தாமே அந்த சுத்தம் செய்யும் பணியை செய்வதில்லை. இந்த உலகத்திலுள்ள அவருடைய ஊழியர்கள் கடினமாக உழைத்து நிலத்தைத் தோண்டி அந்த பொக்கிஷத்தை வெளியே எடுக்க வேண்டும். மக்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து அவர்களை ஆண்டவரிடம் வழி நடத்துவது மிகவும் கடினமான பணியாகும். அது நிலத்தைத் தோண்டி பொக்கிஷம் எடுப்பதைப் போன்று மிகவும் கஷ்டமான வேலையாகும். ஆனால் இந்தப் பணி தேவனுடைய ஊழியக்காரர் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த உலகத்திலுள்ள அப்படிப்பட்ட தேவனுடைய பணியாளர்களில் நானும் ஒருவன். என்னுடைய ஊழியத்தின் நோக்கம்: நிலத்திலிருந்து பொக்கிஷத்தை வெளியில் எடுத்து சுத்தம் செய்து தேவனுக்கு உகந்ததாக மாற்றுவதாகும்.

கொலோசெயர் **1:28-29**இல் தன்னுடைய சொந்த தேவ ஊழியத்தைக் குறித்துக் கூறும் போது பவுல் இவ்வாறு கூறுகிறார்.

> ***"எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் புத்தி சொல்லி, எந்த மனுஷக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணுகிறோம்.***
>
> ***அதற்காக நான் எனக்குள்ளே வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கிற அவருடைய பலத்தின்படி போராடிப் பிரயாசப்படுகிறேன்."***

நம்மால் கூறி அறிவிக்கப்படுகிறவர் இயேசு. இயேசுவைக் கூறி அறிவிப்பதே என்னுடைய

ஊழியத்தின் முழு நோக்கமாகும். தங்களுடைய திறமைக்குக் குறைவாக எந்த தேவனுடைய பிள்ளைகளும் செயல்படுவதில் பவுல் திருப்தியடையவில்லை. பவுல் கடுமையாக உழைத்தார்.

இந்த வசனங்களில் பவுல் உபயோகிக்கும் வார்த்தைகளைக் கவனியுங்கள். "எனக்குள்ளே வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கிற அவருடைய பலத்தின்படி போராடிப் பிரயாசப்படுகிறேன்." இப்படிப்பட்ட ஊழியத்தின் நோக்கம் என்ன? அந்த பொக்கிஷத்தை நிலத்திலிருந்து எடுத்து சுத்தம் செய்து, தன்னுடைய சொந்த ஜீவனைக் கொண்டு நிலத்தைச் சம்பாதித்த தேவனுக்கு உகந்ததாகக் கொடுப்பதேயாகும்.

இதனை நாம் எவ்வாறு செய்ய முடியும்? புத்தி சொல்லி, போதித்து கிறிஸ்துவுக்குள் சிறந்தவர்களாக இருக்கும்படிக்கு மக்களை மாற்றுவதே நமது நோக்கமாக இருக்க வேண்டும். நிலத்திலுள்ள அந்த பொக்கிஷத்திற்கும் நிலத்துக்கும் கொடுக்கப்பட்ட கிரயத்தைக் குறித்து நான் உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அதன் கிரயம்: அவருக்குள்ள அனைத்துமாகும். அவருக்கென்று மீதம் ஏதும் இல்லை. அவருடைய அன்பு அளவு கடந்த அன்பாகும். அந்த பொக்கிஷத்தை அவர் மிகவும் நேசித்தபடியால் இதனை அவர் மிகுந்த மகிழ்ச்சியோடு செய்தார்.

# 2

# விலையேறப்பெற்ற முத்து

நாம் நினைப்பதைக் காட்டிலும் தேவனைப்பற்றிய ஒவ்வொரு காரியமும் பெரியதாகவும் மகிமை பொருந்தியதாகவும் உள்ளது. குறிப்பாக அவருடைய அன்பைப் பொருத்தவரை இது மிகவும் உண்மை. தேவனுடைய தன்மையே அன்புள்ளதாகும். இந்த அன்பை விவரிக்க உபயோகிக்கப்பட்டுள்ள வார்த்தையானது "மிதமிஞ்சிய" (Extravagant) என்ற வார்த்தையாகும். இந்த வார்த்தையானது ஒரு வேளை நாம் அதிகமாகப் பயன்படுத்தாத, கிறிஸ்தவத்திற்கு விரோதமான வார்த்தையாகத் தோன்றலாம். உண்மையாகவே தேவனுடைய அன்பு மிதமிஞ்சிய அன்பாகும்.

மனிதனின் அன்பு அநேக சமயங்களில் குறுகினதாகவும், கருமித்தனமானதாயும், சுய நலத்தை மையமாகக் கொண்டதாகவும் உள்ளது. ஆனால் தேவனுடைய அன்பு அதைப் போன்றதல்ல. அது பரந்து விரிந்தது, எல்லையற்றது, அளவுக்கு அதிகமானது. எபேசியர் ***3:1419***இல் பவுல் நமக்காக ஜெபித்த ஜெபத்தை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்.

***"இதினிமித்தம் நான் பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழுக்குடும்பத்துக்கும் நாம காரணராகிய,***

***நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழங்கால்***

*படியிட்டு,*

*நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும்,*

*விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி,*

*சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து;*

*அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்து கொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ண வேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறேன்.''*

தேவன் நமக்கு வைத்திருப்பனவற்றைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டுமென்றால் நாம் முதலாவது அவரது ஆவியால் பலப்படுத்தப்பட வேண்டும். தேவன் நமக்குக் கொடுக்க இருக்கும் காரியங்களைப் பெற்றுக் கொள்ளத்தக்கதாக நம்மில் சில புதிய காரியங்கள் தோற்றுவிக்கப்பட வேண்டும். அவையாவன என்பதைப் பவுல் இவ்வாறு கூறுகிறார்.

*சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து;*

*அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்து கொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ண வேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறேன்.''*

தமது பரிசுத்த ஆவியால் சிருஷ்டிக்கப்பட்ட இந்த பாத்திரத்திற்குள் தமது முழு அன்பையும் வைக்க தேவன் விரும்புகின்றார். அவரது அன்பின் அகலம், நீளம், உயரம், ஆழம் ஆகியவற்றை நாம் அறிந்து கொள்ள வேண்டுமென்று அவர் விரும்புகிறார். அறிவுக்கெட்டாத அந்த அன்பை நாம் புரிந்து கொள்ள வேண்டுமென்று அவர் விரும்புகின்றார். தேவனுடைய அன்பை நமது அறிவினால் அறிந்து கொள்ள முடியாது. ஆனால் வேத வசனங்களின் மூலமாயும் பரிசுத்த ஆவியினால் மட்டுமே அறிந்து கொள்ள முடியும்.

தேவனுடைய அன்பை அளக்கும் ஒரு அளவுகோலாக நிலத்திலுள்ள பொக்கிஷம் என்கிற இந்த உவமை காணப்படுகிறது. அவனுக்குண்டான அனைத்தும் அதன் விலைக்கிரயமாயிருந்தது என்று அந்த உவமை முழுவதிலும் அடிக்கடி கூறப்பட்டுள்ளது.

இதற்கு அடுத்ததாகக் கூறப்பட்டுள்ள "விலையேறப் பெற்ற முத்து" என்ற உவமையைக் குறித்து நாம் காண்போம். முதல் உவமையாகிய நிலத்திலுள்ள பொக்கிஷமானது பொதுவாக அவருடைய பிள்ளைகளுக்குக் கிறிஸ்துவின் அன்பை அளவிடுகிற அளவுகோலாக அமைந்துள்ளது. ஆனால் "விலையேறப் பெற்ற முத்து" ஆகிய உவமையானது ஒவ்வொரு ஆத்துமாவுக்கும் தேவனுடைய அன்பின் அளவை விளக்குவதாக அமைந்துள்ளது. ஒரு கூட்ட மக்களிலே ஒருவனாக இல்லாமல் தனிப்பட்ட முறையிலே தேவன் ஒவ்வொருவரையும் நேசிப்பதை நாம் பாராட்ட வேண்டும்.

மத்தேயு **13:45-46**இல் நாம் இவ்வாறு வாசிக்கிறோம்.

***"மேலும், பரலோக ராஜ்யம் நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது.***

***அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு, போய், தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று***

***அதைக் கொள்ளுகிறான்."***

*இதற்கு முன் பார்த்த உவமையின் வழியிலே இதை நாம் பார்க்கும் போது இந்த வியாபாரி இயேசுவே. அவர் ஒரு சுற்றுலாப் பயணியோ அல்லது கடையில் பொருட்களை வாங்குபவரோ அல்ல. தான் எதிர்பார்த்திருந்த அந்த பொருளின் உண்மையான விலைக்கிரயத்தை அவர் அறிந்திருந்தார். அவர் அந்த முத்தைப் பார்த்த போது அந்த ஒரு முத்தானது தனது முழுச் சொத்துக்களையும் விற்று அதனை வாங்குமளவிற்கு அது விலையேறப்பெற்றது என்பதை அறிந்திருந்தார். நம்மில் எத்தனை பேர் இவ்வாறு செய்வோம்? ஒரு விலையேறப்பெற்ற கல்லை வாங்குவதற்காக நாம் நம்முடைய அனைத்தையும் விற்று அதனைச் சொந்தமாக்கிக் கொள்ள நம்மில் எத்தனை பேர் தயாராக உள்ளோம்? இதுவே இயேசுவின் அன்பு. அது எல்லையற்றது.*

*அந்த முத்தின் விலையானது அவருக்குள்ள அனைத்தையும் உள்ளடக்கியது. அதுவே நிலத்தின் விலையுமாகும். இயேசு தமக்குள்ள அனைத்தையும் கொடுத்தார் என்பதன் அர்த்தம் என்ன என்பது குறித்து அடுத்தப் பகுதியில் நாம் தியானிப்போம்.*

*முத்து எதைக் குறிக்கிறது? ஒரு காரியம் என்னவென்றால் வேத வாக்கியங்களினடிப்படையில் முத்தானது பாடுகளைக் குறிக்கிறது. புதிய எருசலேமுக்குச் செல்லும் அனைத்துக் கதவுகளும் முத்துக்களால் ஆனது. பாடுகளில்லாமல் புதிய எருசலேமுக்கு நாம் செல்ல முடியாது என்பதை இது காட்டுகிறது. இதனை அல்லாமல் வேறே கதவுகள் இல்லை. முத்தை உண்டாக்கும் கடல் வாழ் பிராணிக்குள் ஏற்படும் ஒரு வகை உறுத்தலினாலேதான் முத்து உற்பத்தியாகிறது. அதற்குள் உண்டாகும் ஒரு வகை கஷ்டமான நிலையே முத்தின் பிறப்பிடமாக அமைகிறது.*

*இந்த முத்தை விற்பதற்குமுன் பல காரியங்கள்*

செய்ய வேண்டும். கடலினடியிலிருந்து மேல் கொண்டு வர வேண்டும். அந்த முத்துப் பூச்சியின் சிப்பியிலிருந்து முத்தைப் பிரித்து எடுக்க வேண்டும். பின் அதனை சுத்தம் செய்ய பல பணிகள் செய்ய வேண்டும். நிலத்திலுள்ள பொக்கிஷம் போன்று இதனை சரி செய்ய வேண்டும். முழு முத்தைத் தயார் செய்வதற்காக அதிகமாக உழைக்க வேண்டும். இயேசு நிலத்தை வாங்கினார். ஆனால் பொக்கிஷத்தை எடுத்து அதனைத் தயார் செய்யும் பணியைத் தனது ஊழியக்காரரிடம் ஒப்படைத்துள்ளார். இது அந்த முத்தை தயார் செய்யும் பணிக்கு ஒப்பானது. பல விதமான பக்குவப்படுத்தும் பணிகளுக்குப் பிறகு கடைசியாக பளபளப்பான, அழகான ஒளிரும் முத்து உருவாகிறது.

விவரிக்க முடியாத அன்போடு அப்படிப்பட்ட ஒரு முத்தை இயேசு தமது கையில் எடுத்துக் கொண்டு அதனைப் பார்ப்பதாக நாம் உருவகப்படுத்திக் காண்போம். இது தனிப்பட்ட ஒரு கூட்டத்தையோ பொதுவான மக்களையோ பற்றியதல்ல. இயேசு ஒரு முத்தினை எடுத்து தமது கையில் வைத்துக் கொண்டு அந்த முத்தைப் பார்த்து "உனக்காகத் தான் இந்த விலையை நான் கொடுத்தேன், எனக்குள்ள அனைத்தையும் கொடுத்தேன்" என்று கூறுவதாக நாம் காணலாம்.

இன்னும் ஒரு படி நாம் செல்வோம். அது மிகவும் முக்கியமானது. உங்களைப் பார்த்து நீங்கள் கூறிக் கொள்ளுங்கள். நான் தான் அந்த முத்தாயிருந்தேன். நானே அந்த முத்து. ஒரு வேளை யாரும் மீட்கப்பட வேண்டிய சூழ்நிலையில் இல்லை என்றால் இயேசு எனக்காக மட்டுமே மரித்திருப்பார். நம்மில் அநேகருக்கு நான் தகுதியற்றவன். எனக்குப் பற்றாக்குறை நான் ஒதுக்கப்பட்டவன் என்பது போன்ற சிந்தனைகளால் பாதிக்கப்பட்டுள்ளோம். " நான் பயனுள்ள ஒருவன்தானா" என்று நினைப்பதை நாம் ஆச்சரியமான ஒன்றாகக்

கருதுகிறோம். நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு முத்து என்பதையும் அதற்காகவே இயேசு தனக்குள்ள அனைத்தையும் கொடுத்தார் என்பதையும் நாம் உணர்ந்து கொள்வது மிகவும் முக்கியமானதொன்றாகும்.

தேவனுடைய அன்பைக் குறித்த நான்கு முக்கியமான ஆனால் சாதாரணமான நான்கு காரியங்கள் கீழேத் தரப்பட்டுள்ளன.

***தேவனுடைய அன்பு தனிப்பட்ட நபருக்குரியது.***

***தேவனுடைய அன்பு நித்தியமானது.***

***தேவனுடைய அன்பு உலகத்தோற்றத்திற்கு முற்பட்டது.***

***தேவனுடைய அன்பு தடை செய்ய முடியாதது.***

இந்த நான்கு குறிப்புகளை விளக்கும் வேத வாக்கியங்களைக் காண்போம்.

# தேவனுடைய அன்பு தனி நபருக்குரியது மற்றும் நித்தியமானது

***"பூர்வ கால முதல் கர்த்தர் எனக்குத் தரிசனையானார் என்பாய்; ஆம் அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன்; ஆதலால் காருணியத்தால் உன்னை இழுத்துக் கொள்ளுகிறேன்." (எரேமியா 31:3)***

தேவனுடைய அன்பு அநாதியானது. அது தனிப்பட்ட நபருக்குரியது. நித்தியமானது. தேவன் தமது அன்பின் மூலமாகத் தம்மிடம் இழுத்துக் கொள்ளுகிறார்.

# தேவனுடைய அன்பு உலகத் தோற்றத்திற்கு முற்பட்டது.

***''தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத் தோற்றத்திற்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டபடியே,***

***பிரியமானவருக்குள் தாம் நமக்குத் தந்தருளின தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக . . ." (எபேசியர்1:4-5)***

*இந்த வசனத்தைச் சுருக்கமாகக் கீழ்க்கண்டவாறு கூறலாம்:*

*''அவருடைய பார்வையில் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களாயும் பிழையற்றவர்களுமாயிருப்பதற்கு"*

*அல்லது*

*''அவருடைய பார்வையில் பரிசுத்தம் உள்ளவர்களாயும் பிழையற்றவர்களுமாயிருப்பதற்கு . . . . அவர் அன்பினால் நம்மை முன் குறித்திருக்கிறார்."*

*இதில் எந்தப் பதத்தை எடுத்துக் கொண்டாலும் தேவனுடைய அன்பு உலகத் தோற்றத்திற்கு முற்பட்டது என்பது தெளிவாகிறது. உலகத் தோற்றத்திற்கு முன்பதாகவே தேவன் நம்மீது அன்பு கூர்ந்திருக்கிறார். அவரை நாம் சந்திப்பதற்கும் அவருடைய அன்பை ருசிப்பதற்கும் ஏற்றவாறு தமது வாழ்வை ஏற்படுத்திக் கொண்டார்.*

# தேவனுடைய அன்பு தடை செய்ய முடியாது

*சாலொமோனின் உன்னதப்பாட்டு 8:6 இல்* ***"நேசம் மரணத்தைப் போல வலிது"*** *எனக் கூறப்பட்டுள்ளது . மரணத்தை யாரும் தடை செய்ய முடியாது. அதை யாராலும் மாற்ற முடியாது. "நான் தயாராக இல்லை எனவே நான் இதை ஏற்க முடியாது" என்று யாரும் மரணத்தைப் பார்த்துக் கூற முடியாது. எந்த மனிதனுக்கும் மரணத்தைத் தடை செய்ய வல்லமை இல்லை. நேசமானது மரணத்தைப் போல வலியது என்று சாலொமோன் கூறுகிறார். புதிய ஏற்பாடு இன்னும் ஒரு படி மேலே நம்மை அழைத்துச் செல்லுகிறது. இயேசு மரித்து உயிர்த்தெழுந்ததினால் அன்பு மரணத்தைவிட வலிமையானது என்பதை நிரூபித்துள்ளார். உலகத்தின் மிக வலிமையான எதிர்மறையான தடை செய்ய முடியாத சக்தியை தடை செய்ய இயலாத நேர்மறையான சக்தியாகிய தேவனின் அன்பு மேற் கொண்டது. "அன்பு ஒரு வழியைக் கண்டடையும்" என்ற ஒரு பழைய ஆங்கிலப் பாடலில் கீழ்க் கண்டவாறு கூறப்பட்டுள்ளது.*

மலைகளின் மேலே,

ஊற்றுகளினடியில்

அன்புக்கு ஒரு வழியுண்டு.

*அன்பு எப்படியாவது தனது நோக்கத்தை அடையும். அதை யாரும் தடை செய்ய முடியாது. எல்லைகள் அதனைக் கட்டுப்படுத்தாது. எதனையும் ஊடுருவிச் செல்லும். எதன் மேலும் ஏறிச் செல்லும். எதனுடைய அடியிலும் கடந்து செல்லும். ஆனால் எங்கு*

செல்ல வேண்டுமோ அங்கு சென்றடையும். இது தேவனுடைய அன்பைப் போன்றது.

இதைப் பற்றி யோசியுங்கள். தேவனுடைய அன்பு தனிப்பட்ட நபருக்குரியது. நித்தியமானது, உலகத் தோற்றத்திற்கு முற்பட்டது, தடைசெய்ய முடியாதது. நீங்கள் இயேசுவின் கரத்தில் முத்தாக நினைத்துக் கொள்ளுங்கள். என்னைக் குறித்த அவருடைய அன்பு தனிப்பட்ட முறையில் எனக்குரியது, நித்தியமானது உலகத்தோற்றத்திற்கு முற்பட்டது, தடை செய்ய முடியாதது என்று உங்களுக்குள்ளே சொல்லிக் கொள்ளுங்கள். பிறகு இதற்கான செலவு எவ்வளவு என்பதை எண்ணிப் பாருங்கள். அது அவருடைய அனைத்தையும் உள்ளடக்கியது. ஆண்டவருக்கு நன்றி சொல்லுங்கள்.

# 3

# இயேசு முழு கிரயத்தையும் செலுத்தினார்

இயேசு, நம்மை மீட்பதற்காக அவர் என்ன விலை கொடுத்தார் என்பதை விளக்கிய இரண்டு உவமைகளை நாம் பார்த்தோம்: நிலத்திலுள்ள பொக்கிஷம் மற்றும் விலையேறப்பெற்ற முத்து ஆகிய இரு உவமைகளே அவைகளாகும். இவ்விரு உவமைகளிலும் அப்பொருட்களை வாங்குபவர் அவற்றை வாங்க தனக்குள்ள எல்லாவற்றையும் விற்றுத்தான் வாங்கியுள்ளார். தனக்குள்ள அனைத்துமே அதன் விலையாக இருந்தது. இது இயேசுவுக்கும் பொருந்தும். நம்மை மீட்க அவருக்கு, தனக்குள்ள எல்லாவற்றையும் செலவழிக்க வேண்டியதாயிருந்தது.

நமக்காகத் தனது ஜீவனையே இயேசு கொடுத்தார் என்பதன் பொருள் என்ன? முதலாவது மீட்பின் கிரயமானது இயேசுவின் இரத்தம் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். 1 பேதுரு1:1819இல்

***"உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அனுசரித்து வந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல்,***

***குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்ததத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று***

***அறிந்திருக்கிறீர்களே"***

*கிறிஸ்துவின் இரத்தத்தில் மட்டுமே நம்முடைய பாவங்கள், அறிவீனம் மற்றும் இருள் இவற்றினின்று நாம் மீட்கப்பட முடியும். ஏன் அது இரத்தமாக இருக்க வேண்டியதாக இருந்தது? பழைய ஏற்பாடு நமக்கு இதற்கான தெளிவான பதிலைத் தருகிறது. எந்த ஒரு சரீரத்தின் உயிரும் ஆத்மாவும் இரத்தத்தில் தான் உள்ளது. ஒரு ஜீவனுள்ள படைப்புக்கு உயிரும் இரத்தமும் இருக்குமானால் அந்த ஜீவனுள்ள வஸ்துக்குள்ள உயிர் அல்லது ஆத்மா அதன் இரத்தத்திலுள்ளது. இக்கூற்று லேவியராகமம் **17:11**இல் தேவனுடைய கட்டளைகளின்படி நடப்பது குறித்த சட்ட திட்டங்கள் மோசேக்கு அருளப்பட்டபோது தெளிவாக்கப்பட்டுள்ளது. தேவன் இதனைச் சொன்னார். இது ஒரு தீர்க்கதரிசனமாகும். மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது. நான் அதை உங்களுக்குப் பலிபீடத்தின் மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவ நிவிர்த்தி செய்யும்படிக்குக் கட்டளையிட்டேன். ஆத்துமாவிற்காகப் பாவ நிவிர்த்தி செய்கிறது இரத்தமே.*

*பழைய உடன்படிக்கையில் இரத்தத்தின் மூலமாகப் பாவ நிவாரணம் என்பது உண்மையானதாக இருந்தது. ஆனால் இது நம் அனைவரின் ஆத்மாக்களுக்காக பூரணமானதும் முடிவானதுமான பாவ நிவாரண பலியாக பலிபீடமாகிய சிலுவையில் இயேசு சிந்திய இரத்தத்தை முன்னடையாளமாக தீர்க்கதரிசனமாகக் கூறப்பட்டுள்ளது என்பது மிகவும் உண்மையானதாகும்.*

*இங்கு "உயிர்" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள மூல எபிரேயச் சொல் "ஆத்மா" என்ற எபிரேயச் சொல்லுக்கான வார்த்தையாகும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். எந்த ஒரு உயிரினத்திற்கும் அதன் ஆத்மா அதன் இரத்தத்திலுள்ளது. இயேசு தனது ஜீவனுள்ள இரத்தத்தை அளிப்பதன் மூலம் தனது ஆத்மாவையே பாவ நிவாரணமாக சிலுவையாகிய பலிபீடத்தில் அளிக்கப் போவதை ஏசாயா*

தீர்க்கதரிசனமாகக் கூறியுள்ளார். பாவ நிவாரணமாகிய பலியாக இயேசு மரிக்கப்போவது குறித்து ஏசாயா கூறும்போது இவ்வாறு கூறுகிறார்.

***"அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி, அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காக வேண்டிக் கொண்டதினிமித்தம் அநேகரை அவருக்குப் பங்காகக் கொடுப்பேன்" ஏசாயா 53:12***

இயேசு செய்த நான்கு காரியங்கள் எவை என்பதைக் கவனியுங்கள். அவர் தனது ஆத்துமாவை மரணத்திலூற்றினார். அவர் அக்கிரமக்காரருள் ஒருவராக எண்ணப்பட்டார். (அவர் கள்வர்களுக்கு மத்தியில் சிலவையிலறையப்பட்டார்). அநேகருடைய பாவத்தை சுமந்தார். (உண்மையில் முழு உலகத்தின் பாவத்தையும்), அக்கிரமக்காரருக்காக வேண்டிக் கொண்டார். இயேசு சிலுவையில் மரிக்கும் முன்பதாக "பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே'' என்று ஜெபித்தார். இந்த ஒவ்வொரு காரியங்களும் இயேசுவின் வாழ்வில் நிறைவேறியது. **12**ஆம் வசனத்தில் கூறப்பட்டுள்ள முதல் காரியத்தை நாம் முக்கியப்படுத்த வேண்டும். அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றினார். . . . . . . அவர் தம்முடைய வாழ்வையே ஊற்றினார்.

என்ன நடக்கப்போகிறது என்பதைக் குறித்த சரியான முன்னறிவிப்பு என்ன என்பதைத் தெரிந்து கொள்ள நாம் லேவியராகமத்திலுள்ள ஒரு வசனத்தை பார்க்க வேண்டும். யூத மக்களின் வாழ்க்கையில் அவர்கள் மத சம்பந்தமான வருடத்தின் முக்கியமான நாளாகக் கருதப்படுவது பாவ நிவிர்த்தியின் நாளாகும். தற்காலத்தில் அது ''யாம் கிப்பூர்'' என்று அழைக்கப்படுகிறது. அந்த நாளிலே பிரதான ஆசாரியன்

தனது கரங்களில், இஸ்ரவேல் மக்களுடைய ஒரு வருடத்தின் பாவங்களைத் தாங்கி நிற்கும் பலியின் இரத்தத்தை எடுத்துக் கொண்டு மகா பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசிப்பான். அதனை மோசே கீழ்க்கண்டவாறு விவரிக்கிறார்.

> ***“பின்பு காளையின் இரத்தத்திலே கொஞ்சம் எடுத்து, கீழ்ப்புறமாக நின்று, தன் விரலினால் கிருபாசனத்தின் மேல் தெளித்து, அந்த இரத்தத்தில் கொஞ்சம் எடுத்துக் கிருபாசனத்துக்கு முன்பாக ஏழுதரம் தன் விரலினால் (பிரதான ஆசாரியன்) தெளிக்கக் கடவன்.” லேவியராகமம் 16:14***

தேவனுடைய பிள்ளைகளின் பாவங்களை இரத்தம் மட்டுமே நிவிர்த்தி செய்ய முடியும். அந்த இரத்தமானது தேவனுடைய சமுகத்தில் மகா பரிசுத்த ஸ்தலத்தினுள் கொண்டு வரப்பட வேண்டும். அந்த இரத்தம் ஏழு முறை தெளிக்கப்பட வேண்டும் என்பதைக் கவனியுங்கள். இது ஏதோ எதேச்சையாக நடப்பதல்ல. ‘ஏழு’ என்பது பரிசுத்த ஆவியானவரின் செயலைக் குறிப்பதாகும். ‘ஏழு’ என்ற எண் முழுமையை அல்லது முடிவுற்ற ஒரு செயலைக் குறிக்கும். இயேசு தனது இரத்தத்தைச் சிந்தினதின் மூலம் இது நிறைவேறியது. அந்தப் பலி நிறைவேறும் முன்பதாக அவரது இரத்தம் ஏழுமுறை தெளிக்கப்பட்டது.

பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ள தீர்க்கதரிசனங்கள் யாவும் சுவிசேஷங்களில் கூறப்பட்டுள்ள சரித்திரப் பூர்வமான சம்பவங்கள் மூலம் நிறைவேறியதை நாம் காணலாம். இயேசுவின் இரத்தம் ஏழு முறை ஏழு வெவ்வேறு சம்பவங்களில் தெளிக்கப்பட்டது.

**முதலாவது தெளிக்கப்பட்ட (சிந்தப்பட்ட) அவருடைய இரத்தம்** கெத்சமனே தோட்டத்தில் நிகழ்ந்தது.

இறுதி பலியாக அவர் தன்னை ஆண்டவருக்கு ஒப்படைக்க வேதனையோடே போராடிய நிகழ்வுதான் அது.

> ***''அவர் மிகவும் வியாகுலப்பட்டு அதிக ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார். அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது.''***
>
> ***லூக்கா 22:44***

அவருடைய இரத்தம் வேர்வையுடன் சேர்ந்த இரத்தத்தின் பெருந்துளிகளாய் விழுந்தன. அவருடைய போராட்டமும் மன வேதனையும் இதன் மூலம் வெளிப்பட்டது. இது தான் **முதலாவது இரத்தம் சிந்துதலாகும்.**

அவர் பிரதான ஆசாரியனுடைய வீட்டில் இருந்த போதும், அவரைக் கேள்வி கேட்ட போதும், அவர் மிகவும் கீழ்த்தரமாக நடத்தப்பட்டபோதும் **இரண்டாவது இரத்தம் சிந்துதல் நிகழ்ந்தது.**

> ***"அப்பொழுது, அவருடைய முகத்தில் துப்பி, அவரைக் குட்டினார்கள்; சிலர் அவரைக் கன்னத்தில் அறைந்தார்கள்." மத்தேயு 26:67***

"அவரைக் குட்டினார்கள்" என்பதை "அவரைத் தடியால் அடித்தார்கள்" என்றும் பொருள் கொள்ளலாம். இது மிகவும் சரியானதாக இருக்கும் எனக் கருதலாம். ஏனெனில் மீகா **5:1**இல் ''இஸ்ரவேலுடைய நியாயாதிபதியைக் கோலினால் அடிப்பார்கள்" என்று தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டது. ஆனால் எப்படி நடந்திருந்தாலும் கையினாலோ கோலினாலோ அடித்தார்கள். அதனால் இரத்தம் இவரது முகத்திலிருந்து வந்தது. (மற்ற இடத்தை விட மூக்கிலிருந்து இரத்தம் வந்தது)

**மூன்றாவது இரத்தம் சிந்துதல்** குறித்து மத்தேயு

*27:26*இல் கூறப்பட்டுள்ளது.

***"அவன் (பிலாத்து) பரபாசை அவர்களுக்கு விடுதலையாக்கி இயேசுவையோ வாரினால் அடிப்பித்து சிலுவையில் அறையும்படிக்கு ஒப்புக்கொடுத்தான்."***

இந்த நிகழ்ச்சியும் முன்பதாகவே பழைய ஏற்பாட்டில் தேவன் கூறுவதாகக் கூறப்பட்டுள்ளது:

***"அடிக்கிறவர்களுக்கு என் முதுகையும், தாடை மயிரைப் பிடுங்குகிறவர்களுக்கு என் தாடைகளையும் ஒப்புக் கொடுத்தேன்; அவமானத்துக்கும் உமிழ் நீருக்கும் என் முகத்தை மறைக்கவில்லை." ஏசாயா 50:6***

தேவன் தமது முதுகை ஒப்புக்கொடுத்தார் என்பதை நாம் கவனிக்க வேண்டியது மிகவும் முக்கியம். அவரை யாரும் பலவந்தப்படுத்தவில்லை. ஆனால் அவர் தம்மையே பலியாக ஒப்புக் கொடுத்தார். அவர் ரோம சவுக்கால் அடிக்கப்பட்டார். அந்த சவுக்கின் நுனியில் எலும்புகளாலும் இரும்புத் துண்டுகளாலும் கட்டப்பட்டிருக்கும். இந்த சவுக்கால் ஒரு மனிதனின் முதுகில் அடிக்கும் போது அது உண்மையில் இம்மனிதனின் முதுகை உழுது சதையைத் தோண்டி எடுத்துக் கொண்டு வருவதால் எலும்புகள் கூட வெளியே தெரியும். இதுதான் மூன்றாவது இரத்தம் சிந்துதலாகும்.

**நான்காவது இரத்தம் சிந்துதல்** பற்றி புதிய உடன்படிக்கையில் அதிகமாகக் கூறப்படவில்லை. எனினும் ஏசாயா **50:6**ஐ நாம் படிக்கும் போது:

***"அடிக்கிறவர்களுக்கு என் முதுகையும் தாடை மயிரைப் பிடுங்குகிறவர்களக்கு என் தாடைகளையும் ஒப்புக்கொடுத்தேன்"***

இயேசுவின் தாடியைப் பிடித்து இழுத்துத் தாடி மயிர்களை கைகளில் பிய்த்து எடுத்ததால் அவரது

இரத்தம் சிந்தப்பட்டது.

**ஐந்தாவது இரத்தம் சிந்துதல்** அவருக்கு சூட்டப்பட்ட முள் முடியினால் ஏற்பட்டதாகும். மத்தேயு **27:28-29** ல் இதனை நாம் காணலாம்.

***“அவர் வஸ்திரங்களைக் கழற்றி, சிவப்பான மேலங்கியை அவருக்கு உடுத்தி,***

***முள்ளுகளால் ஒரு முடியைப் பின்னி, அவர் சிரசின் மேல் வைத்து”***

அதை அவர் தலையின் மேல் வைத்தது மட்டுமல்ல. அந்தக் கொடூரமான ரோமப் போர்ச் சேவகர்கள் கூர்மையான முள்ளுகளால் (இஸ்ரவேல் நாட்டில் இன்றும் கூட அந்த முட்களைக் காணலாம்) ஆன கிரீடத்தை அவர் தலையின் மேல் வைத்து அழுத்தினார்கள். பின் கோலால் அவரது தலையில் அடித்தார்கள். அதனால் அவரது தலையினுள் அந்த முட்கள் பாய்ந்து சென்றன. இதுதான் ஐந்தாம் இரத்தம் சிந்துதலாகும்.

**ஆறாம் இரத்தம் சிந்ததுல்** சிலுவையில் அறையப்பட்ட நிகழ்ச்சியாகும். இது குறித்து மத்தேயு **27:35**இல் நாம் காணலாம்.

***‘‘அவரைச் சிலுவையில் அறைந்த பின்பு, அவர்கள் சீட்டுப் போட்டு அவருடைய வஸ்திரங்களைப் பங்கிட்டுக் கொண்டார்கள்.”***

அவரது கைகளையும் கால்களையும் ஆணிகளால் அடித்தார்கள். இந்த நிகழ்வு பற்றிக் கூட பழைய ஏற்பாட்டில் முன்னறிவிக்கப்பட்டுள்ளது. சங்கீதம் **22:16** இவ்வாறு கூறுகிறது.

***“என் கைகளையும் என் கால்களையும் உருவக் குத்தினார்கள்.”***

**18**ஆம் வசனத்தில்

***"என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு, என் உடையின் பேரில் சீட்டுப் போடுகிறார்கள்."***

**கடைசியாக ஏழாவது இரத்தம் சிந்துதல்.** இது இயேசு இறந்தபின்பு நிகழ்ந்ததாகும். சிலுவையிலிருந்த மூவரும் இறந்துவிட்டனரா என அறிய ஓர் ரோமப் போர்ச் சேவகன் அனுப்பப்பட்டான். அவன் அந்த இரு கள்வரையும் கொன்று விட்டு இயேசுவிடம் வரும் போது இயேசு ஏற்கெனவே மரித்துப் போனார் என அறிந்து கொண்டான்.

***"ஆகிலும் போர்ச் சேவகன் ஒருவன் ஈட்டியினாலே அவருடைய விலாவில் குத்தினான்; உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது" யோவான் 19:34***

இந்த ஏழு இரத்தம் சிந்துதல்களினாலும் அவரது உடலில் இருந்த அனைத்து இரத்தமும் வெளியேறியது. அவரது ஆத்துமாவை மரணத்திலூற்றினார். அவர் தனது இரத்தத்தை ஏழு முறை சிந்தினார்.

***1. அவரது வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய் விழுந்தது.***

***2. அவரது முகத்தில் கைகளாலும் இரும்புத்தடிகளாலும் அடித்தார்கள்.***

***3. ரோம சவுக்கால் அடித்தார்கள்.***

***4. அவரது தாடி மயிரைப் பிய்த்து இழுத்தார்கள்.***

***5. அவரது தலையில் முள்முடி சூட்டப்பட்டது.***

***6. அவரது கைகளிலும் கால்களிலும் ஆணிகள் அடிக்கப்பட்டன.***

***7. அவரது விலாவில் ஈட்டியால் குத்தப்பட்டது.***

இந்த பட்டியலை நீங்கள் படிக்கும் போது அவரது அன்பின் ஆழத்தை நினைவு கூறுங்கள். இதுதான் அவர் கொடுத்த விலை. அவருடைய அனைத்தையும் இதற்காக

செலவழித்தார். தெய்வம் என்ற நிலையில் அவருடைய சிங்காசனம், மகிமை, மற்றும் கனம் அனைத்தையும் அவர் சாதாரணமாக இழந்து போகவில்லை. உலகத்தில் அவருக்குச் சொந்தமான சில உடைமைகளையும் மனிதன் என்ற முறையில் அவர் விட்டுக் கொடுக்கவில்லை. ஆனால் அவர் தனது முழுமையையும் கொடுத்தார். தனது ஜீவனையே கொடுத்தார். மீட்கும் விலையாக தனது இரத்தத்தை சிந்தி தனது அனைத்தையும் ஊற்றிவிட்டார். இதனை சிந்தித்துப் பாருங்கள். இதுவே தேவனின் அன்பின் அளவுகோலாகும் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். சுருக்கமாகக் கூறினால் அந்த அன்பு எல்லையற்றது.

# 4

# பூரண சுதந்தரிப்பு

*மீட்பின் மூலமாக கிறிஸ்துவில் நாம் எதைப் பெற்றுக் கொள்கிறோம் என்பது குறித்து நாம் காண்போம்: அது எல்லையற்ற சுதந்தரிப்புகளாகும். நம்மை மீட்பதற்கு அவர் கொடுத்த விலைக் கிரயமானது அளவிட முடியாதது மட்டுமல்ல கிறிஸ்துவின் மூலமாய் அவர் நமக்கு அளிக்கும் அனைத்தும் அளவிடமுடியாததாகும்.*

*கிறிஸ்துவின் மீது நமக்குள்ள நம்பிக்கையின் மூலமாக நமக்குக் கிடைப்பது எவையென்பது குறித்து பவுல் ரோமர் 8:15-17இல் கிறிஸ்தவர்களுக்கு எழுதுகிறார்.*

***அந்தப்படி, திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப் பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள்***

***''நாம் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கிறோமென்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறார்.***

***நாம் பிள்ளைகளானால் சுதந்திரருமாமே. தேவனுடைய சுதந்திரராம், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்திரருமாமே. கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூட பாடுபட்டால் அப்படியாகும்."***

*'அப்பா' என்ற சொல் அராமிக் அல்லது அரபிச்*

சொல்லாகும். இது ஆங்கிலத்தில் "டாடி" (அப்பா) என்ற சொல்லுக்குச் சமமாகும். தந்தையாகிய தேவனோடு நமக்குள்ள நெருங்கிய உறவை வெளிப்படுத்தும் விதமாக அவரை நாம் 'அப்பா பிதாவே' என்று கூப்பிடுகிறோம். தேவ ஆவியானவர் தாமே இதைக்குறித்த நிச்சயத்தையும் நம்பிக்கையையும் நமக்கு தருகிறார்.

வேதம், நாம் தேவனுடைய பிள்ளைகள் என்று கூறுகிறது. ஆனால் தேவ ஆவியானவர் இந்த உண்மைதனை தனிப்பட்ட ஒவ்வொருவர் உள்ளத்திலும் உறுதிப்படுத்துகிறார். நாம் தேவனுடைய பிள்ளைகள். சாதாரணமாக மனித நியதிப்படி நாம் பிள்ளைகளானால் வாரிசுகளாகவும் மாறுகிறோம். எனவே இங்கே நாம் தேவனுக்கு வாரிசுகளாகவும் கிறிஸ்துவோடு நாம் உடன் சுதந்திரவாளிகளாகவும் மாறுகிறோம். ஆனால் இதற்கு ஒரு நிபந்தனை உண்டு. அது, நாம் அவரோடு கூடப் பாடுபட விருப்பமுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதாகும். அவரோடு கூட சுதந்திரவாளியாக இருக்க நமக்கு இது ஒரு நிபந்தனையாகும். முத்தானது பாடுபடுதலின் மூலம் கிடைக்கும் "பலன்" என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

உடன் சுதந்திரவாளி என்பதன் பொருளைப் புரிந்து கொள்வது மிகவும் முக்கியமானதாகும். மொத்த சுதந்திரத்தில் நமக்கு ஏதோ ஒரு சிறிய பகுதி கிடைப்பதாக அர்த்தமல்ல. இயேசு முதற்பேரான குமாரன் என்பதால் முழுச் சுதந்திரமும் அவருக்குரியதாகும். நாம் அந்த முழுச் சுதந்திரத்திற்கும் பங்காளிகளாவோம். இயேசுவிற்கு உள்ள முழுச் சுதந்திரத்தில் நம் ஒவ்வொருவருக்கும் அந்த முழுச் சுதந்திரத்தின் மீதும் உரிமை உள்ளது. தேவனுடைய ராஜ்யத்தின் சட்டமே பகிர்ந்து கொள்வதாகும். நாம் அவரவருடைய பங்கினை பிடுங்கிக் கொள்வதல்ல. ஆனால் பிதாவாகிய தேவனுக்குள்ளதையும் கிறிஸ்துவாகிய குமாரனுக்குள்ளதையும் நாம் அனைவருமேபகிர்ந்து கொள்வதாகும்.

இயேசு இந்த சுதந்திரத்தைக் குறித்து என்ன கூறுகிறார் எனக் காண்போம்: யோவான் **16:13-15** இல் பரிசுத்த ஆவியானவர் அருளப்படுவது குறித்து பேசும்போது இவ்வாறு கூறுகிறார்:

> ***"சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்.***
>
> ***அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதனால் என்னை மகிமைப்படுத்துவார்.***
>
> ***பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள்; அதினாலே அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்றேன்."***

பிதாவுக்குச் சொந்தமானதெல்லாம் குமாரனுக்குமுரியது. இந்த சுதந்திரத்திற்குப் பரிசுத்த ஆவியானவர்தான் நிர்வாகி என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். பரிசுத்த ஆவியானவரோடு நமக்கு சரியான உறவு இல்லாமல் அவரோடேகூட ஐக்கியமாக நடந்து செல்லாவிட்டால் நாம் சொல்லளவில் இராஜாவுக்குப் பிள்ளைகளாக இருந்தாலும், நாம் நமது சுதந்திரத்தில் பிரவேசிக்காததால் நாம் பிச்சைக்காரர்களாகவும், ஒன்றுமில்லாதவர்களாகவும் இருப்போம். சுதந்திரம் என்பது பிதாவாகிய தேவனும் குமாரனாகிய கடவுளும் வைத்திருக்கும் அனைத்தையும் குறிப்பதாக உள்ளது. அவர்கள் ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்கிறார்கள். நாமும் அவர்களோடு பகிர்ந்து கொள்கிறோம். அதுதான் கிறிஸ்துவின் மூலமாய் தேவன் நமக்குக் கொடுப்பதின் நிறைவான ஆசீர்வாதமாகும். அவர் கஞ்சத்தனமாக இருப்பதில்லை. அவர் குறைவாகவோ, சட்டப்படிதான் கொடுப்பவருமோ அல்ல.

ஆனால் அளவற்ற முறையில் கொடுப்பார்.

நம்முடைய சுதந்திரத்தின் விரிவான தன்மை குறித்துக் கூறப்படும் மற்றொரு வேதப் பகுதி குறித்து நாம் காண்போம்.

***"தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக் கொடுத்தவர், (அவர் கொடுத்த விலை அதுதான்) அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?" ரோமர் 8:32***

இந்த வார்த்தைகள் எதனைத் தொடர்புபடுத்துகின்றன என்பதைக் காண்போம். இயேசுவை நாம் ஏற்றுக் கொள்ளும் போது தேவன் நமக்கு அனைத்தையும் இலவசமாகத் தருகிறார். அவரில்லாமல் நாம் எதையும் பெற முடியாது. சுதந்திரத்தின் பலன்களையும் அதன் முழு இலவசத் தன்மை குறித்தும் எவ்வளவு அழுத்தமாக கூறப்பட்டுள்ளது. நாம் அதைச் சம்பாதிக்க முடியாது. ஆனால் அதனை நாம் இலவசமாகப் பெறுகிறாம். இதில் அனைத்தும் அடங்கும் முழுச் சுதந்திரத்திற்கும் நாம் சுதந்திரவாளிகள். இயேசுவை நாம் ஏற்றுக்கொள்ளும்போது பிதாவாகிய தேவனும் குமாரனாகிய தேவனும் எதையெல்லாம் வைத்திருக்கிறார்களோ அவையெல்லாம் பெற்றுக் கொள்ள நமக்கும் உரிமையுண்டு.

கொரிந்தியருக்கு எழுதின முதலாம் நிருபத்தில் பவுல் விசுவாசிகளைப் பார்த்து அவர்கள் எவ்வளவு பணக்காரர்கள் என்பதை விளக்க முற்படுகிறார். அவர்கள் தரித்திரராகத் தங்களைப் பாவித்துக் கொண்டிருந்ததை அவர் கடிந்து கொள்ளுகிறார். அவர்கள் சாதாரணமானவர்களாகவும் குறைவுள்ளவர்களாளயும் ஒருவர் மேல் ஒருவர் எரிச்சலுள்ளவர்களாயும் இருந்தனர். இதனால் அவர்களுக்கு என்ன உரிமையாக உள்ளதோ அதை

அறிந்து கொள்ளாமல் உள்ளனர் என்று பவுல் கூறுகிறார்.

> ***“இப்படியிருக்க, ஒருவனும் மனுஷனைக் குறித்து மேன்மை பாராட்டாதிருப்பானாக; எல்லாம் உங்களுடையதே;***
>
> ***பவுலாகிலும், அப்பொல்லோவாகிலும் கேபாவாகிலும், உலகமாகிலும், ஜீவனாகிலும் மரணமாகிலும், நிகழ்காரியங்களாகிலும், வருங்காரியங்களாகிலும், எல்லாம் உங்களுடைய;***
>
> ***நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள்; கிறிஸ்து தேவனுடையவர்.” 1 கொரிந்தியர் 3:21-23***

இது மிகவும் சிறந்த அற்புதமான வசனமல்லவா? எல்லாம் உங்களுடையது என்று கூறுகிறார். சிறிதான காரியங்களைச் செய்வதை நிறுத்திக் கொள்ளுங்கள். எந்த ஊழியக்காரரைச் சார்ந்தும் இராதீர்கள். குறுகலான சிந்தனைகளை விட்டொழியுங்கள். எல்லாம் உங்களுடையது.

இது நமக்கு இலவசமாகக் கொடுக்கப்பட்டது, இதனை விலை கொடுத்து வாங்கமுடியாது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இதைப் புரிந்து கொள்ளும் அறிவையும் விசுவாசத்தையும் விரிவாக்கிக் கொடுக்குமாறு நாம் பரிசுத்த ஆவியானவரைக் கேட்க வேண்டும். இது மிகவும் முக்கியமானதாகும். பரிசுத்த ஆவியானவர்தான் நிர்வாகி. அவர் நம்மோடு பேசி சத்தியத்திற்குள் நம்மை நடத்தினாலொழிய இவைகள் வெறும் வார்த்தைகளாக மட்டுமே இருக்குமேயொழிய கண்கூடாக நாம் காண முடியாது. வாக்குத்தத்தங்களையெல்லாம் நிரூபணமாக்கித் தருபவர் பரிசுத்த ஆவியானவரே.

***1*** யோவான் ***4:16*** இன் இரண்டு விதமான மொழி பெயர்ப்புகளைக் காண்போம்.

***"தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறாம். தேவன் அன்பாகவே இருக்கிறார்; அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்."***

தேவன் நமக்காக வைத்திருக்கும் அன்பை அறிந்து அதன் மேல் நாம் சார்ந்திருக்கிறோம். தேவன் அன்பாகவே இருக்கிறார். அன்பில் வாழ்பவன் தேவனுடன் வாழ்கிறான். தேவனும் அவனில் வாழ்கிறார்.

ஆரம்ப வரிகளைக் கவனியுங்கள். தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம். வேறு ஒரு மொழி பெயர்ப்பு: தேவன் நமக்காக வைத்திருக்கும் அன்பை அறிந்து அதன் மேல் நாம் சார்ந்திருக்கிறோம். இரண்டு காரியங்கள் உள்ளன. ஒன்று தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை அறிந்து கொள்வது. மற்றொன்று: தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை விசுவாசிப்பது. வேறு மொழி பெயர்ப்பின்படி தேவன் நம்மேல் வைத்திருக்கும் அன்பின் மீது சார்ந்திருப்பது.

அநேக கிறிஸ்தவர்கள் தேவனுடைய அன்பைக் குறித்துக் கூறப்படும் வேதவாக்கியங்களை சபையில் கூறக் கேட்கிறார்கள். ஆனால் நாம் அதன் மீது சார்ந்திருக்காதவரை அவைகள் நமது வாழ்வில் உண்மையாயிருப்பதில்லை. தேவன் நம்மை நேசிக்கிறார் என்பதையும் நம்மை மீட்பதற்காக மிக அதிகமான விலை கொடுத்துள்ளார் என்பதையும் நாம் மிகவும் கவனத்தில் கொள்ள வேண்டும். இப்படி நம்மை மீட்டு முழு சுதந்திரத்தையும் நமக்குச் சொந்தமாக்கியுள்ளார். இந்த உண்மையை நாம் உணர்ந்து நடக்க வேண்டும். மேலும் அதைச் சார்ந்திருக்க வேண்டும். நாம் மற்ற மக்களிடம் (நம்மிடமும்) குறைவுள்ளவர்களாகவும், கருமிகளாகவும் அற்பத்தனமாக நடப்பவர்களாகவும் இருப்பதை விட்டுத் தேவனைப் போல அளவுக்கதிகமான நிலையில் உள்ளவர்களாக இருக்கப் பழக வேண்டும்.

# 5

# அளவு கடந்த அன்பை திருப்பிச் செலுத்துதல்

மனுக்குலத்தின் மீது தேவன் கொண்டுள்ள அன்பை சில குறிப்பிட்ட நிலைகளின் மூலம் நாம் அளந்து தெரிந்து கொள்ளலாம். முதலாவதாக, தேவனும் இயேசுவும் கொடுத்த விலைக்கிரயமாகும். இவ்விரு உவமைகளிலும் அந்த விலைக்கிரயம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. அவரிடமிருந்து அனைத்தையும் கொடுத்தார். தன்னுடைய உயிரான இரத்தத்தைக் கொடுத்தார். தன்னுடைய ஆத்துமாவை அல்லது தனது ஜீவனையே ஏழு விதமான இரத்தம் சிந்துதல் மூலமாக மரணத்தில் ஊற்றினார்.

இரண்டாவதாக, கிறிஸ்துவின் வழியாக அவர் நமக்குக் கொடுக்கும் சுதந்திரத்தின் மூலமாக நம்மைக் குறித்த தேவனின் அன்பை நாம் அளவிடலாம். நாம் தேவனுடைய சுதந்திரவாளிகள் மற்றும் கிறிஸ்துவோடு உடன் சுதந்திரவாளிகள். பிதாவாகிய தேவனுடைய மற்றும் குமாரனாகிய தேவனுடைய முழுச் சுதந்திரமும் இயேசுவோடு சேர்த்து நமக்குரியதாகிறது. தேவனுடைய அன்பின் மிகப்பெரிய ஆசீர்வாதத்தை அளவிடக்கூடிய காரியங்கள்: இயேசு கொடுத்த விலைக்கிரயமும் அவர் நமக்களிக்கும் சுதந்திரமுமாகும்.

நாம் இனி நாணயத்தின் மறுபக்கம் குறித்துக் காண்போம். தேவனின் அளவிடமுடியாத அன்புக்கு நாம் எவ்வாறு பதில் கூறுவோம்? மிகவும் எளிதானது.

நாமும் அவரைப் போல அளவிடமுடியாத முறையில் திருப்பிச் செலுத்தவேண்டும். உதாரணமாக இயேசு மரணமடைவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பாக ஒரு பெண் இயேசுவுக்கு என்ன செய்தாள் என்பதற்கான விபரத்தை நாம் காண்போம்.

*"அவர் பெத்தானியில் குஷ்டரோகியாயிருந்த சீமோன் வீட்டிலே போஜனபந்தியிருக்கையில், ஒரு ஸ்திரீ விலையேறப்பெற்ற நளதம் என்னும் உத்தம தைலமுள்ள வெள்ளைக்கல் பரணியைக் கொண்டு வந்து, அதை உடைத்து, அந்த தைலத்தை அவர் சிரசின்மேல் ஊற்றினாள்.*

*அப்பொழுது சிலர் தங்களுக்குள்ளே விசனமடைந்து: இந்தத் தைலத்தை இப்படி வீணாய்ச் செலவழிப்பானேன்?*

*இதை முந்நூறு பணத்துக்கு அதிகமான கிரயத்துக்கு விற்று, தரித்திரருக்குக் கொடுக்கலாமே என்று சொல்லி, அவளைக்குறித்து முறுமுறுத்தார்கள்.*

*இயேசு அவர்களை நோக்கி: அவளைவிட்டு விடுங்கள்; ஏன் அவளைத் தொந்தரவு படுத்துகிறீர்கள்? என்னிடத்தில் நற்கிரியையைச் செய்திருக்கிறாள்.*

*தரித்திரர் எப்போதும் உங்களிடத்தில் இருக்கிறார்கள், உங்களுக்கு மனதுண்டாகும்போதெல்லாம் நீங்கள் அவர்களுக்கு நன்மை செய்யலாம், நானோ எப்போதும் உங்களிடத்தில் இரேன்.*

*இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்; நான் அடக்கம் பண்ணப்படுவதற்கு எத்தனமாக, என் சரீரத்தில் தைலம் பூச முந்திக் கொண்டாள். இந்தச் சுவிசேஷம் உலகத்தில் எங்கெங்கே*

***பிரசங்கிக்கப்படுமோ அங்கங்கே இவளை நினைப்பதற்காக இவள் செய்ததும் சொல்லப்படும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்." (மாற்கு 14:3-9)***

இயேசு மிகச்சிறந்த ஒரு காரியத்தைக் கூறுகிறார்: ''இந்தச் சுவிசேஷம் உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ அங்கங்கே இவளை நினைப்பதற்காக இவள் செய்ததும் சொல்லப்படும்" யோவான் **12:3-6**இல் இதே நிகழ்ச்சி வேறு விதமாகக் கூறப்படுவதை நாம் காண்கிறோம். இந்த நிகழ்ச்சியில் நடைபெற்ற காரியங்கள் அந்தப் பெண்ணை நமக்கு வேறு விதமாக அடையாளம் காட்டுகிறது.

***"அப்பொழுது மரியாள் விலையேறப்பெற்ற களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு இராத்தல் கொண்டு வந்து, அதை இயேசுவின் பாதங்களில் பூசி, தன் தலை மயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள்; அந்த வீடு முழுவதும் தைலத்தின் பரிமளத்தினால் நிறைந்தது.***

***அப்பொழுது அவருடைய சீஷரில் ஒருவனும் அவரைக் காட்டிக் கொடுக்கப் போகிறவனுமாகிய சீமோனுடைய குமாரனான யூதாஸ்காரியோத்து: இந்தத் தைலத்தை முன்னூறு பணத்துக்கு விற்று, தரித்திரருக்குக் கொடாமற் போனதென்ன என்றான்.***

***அவன் தரித்திரரைக் குறித்துக் கவலைப்பட்டு இப்படிச் சொல்லாமல், அவன் திருடனானபடியினாலும், பணப்பையை வைத்துக் கொண்டு அதிலே போடப்பட்டதைச் சுமக்கிறவனானபடியினாலும் இப்படிச் சொன்னான்."***

இந்த நிகழ்ச்சியில் மூன்று முக்கியக்

காரியங்களைக் கவனியுங்கள்: முதலாவது மரியாள் செய்த காரியம். இரண்டாவது: இயேசு செய்த காரியம். மூன்றாவது: அவளைக் குறைகூறியவர்கள் எப்படி நடந்து கொண்டார்கள் என்பதாகும்.

## மரியாள் செய்தது என்ன ?

முதலாவது, மரியாள் செய்தது என்ன என்பதை கவனியுங்கள். அவள் மிகவும் தாராளமாக நடந்து கொண்டாள். ஒரு வருடத்திற்கு மேலான சம்பளத் தொகைக்குச் சமமான தொகை விலை பெறுமானமான தைலத்தை அவள் இயேசுவின் பாதத்தில் ஊற்றினாள். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இதற்கான இன்றைய மதிப்பு **15,000/-** டாலருக்கும் மேற்பட்டதாகும். **15,000/-** டாலருக்கும் அதிக விலைமதிப்புள்ள தைலம் இருந்த மிகவும் அழகான புட்டியை அவள் உடைத்தாள். அந்த புட்டியை மீண்டும் உபயோகிக்க முடியாது. ஒரு சில கணத்தில் அது ஒன்றுமில்லாமல் போய்விட்டது. எனவே அது விலைமதிப்பற்றது.

இரண்டாவது மரியாள் முற்றிலும் தன்னை ஒப்படைத்தவளாகக் காணப்பட்டாள். நாம் மாற்கு நற்செய்தி நூலில் வாசிப்பது போல அவள் இயேசுவின் தலையில் ஊற்றியதுமட்டுமல்ல, நாம் யோவான் நற்செய்தி நூலில் வாசிப்பது போல அவள் அதை இயேசுவின் பாதத்தில் ஊற்றி, தன்னுடைய தலை மயிரால் அவர் பாதங்களைத் துடைத்தாள். மரியாள் தனது முழங்காலில் இயேசுவின் பாதத்தருகே நின்று தனது நீண்ட தலை முடியைத் தொங்கவிட்டு அந்தத் தைலத்தை அவர் பாதத்தில் ஊற்றி. அவர் பாதங்களை அன்பாகத் தடவிக் கொடுப்பதை உங்கள் மனக்கண்ணில் கொண்டு வந்து பாருங்கள்.

## இயேசு செய்தது என்ன?

*மிகவும் வல்லமையான காரியங்களை இவளைக் குறித்து இயேசு கூறியதைக் கவனியுங்கள். அவர், அவளைக் குறை கூறியவர்களோடு சேர்ந்து பேசவில்லை. மாற்கு **14:6**இல் அந்தப் பெண்ணைக் குறித்து, "அவள் என்னிடத்தில் நற்கிரியையை செய்திருக்கிறாள்" என்று இயேசு கூறுகிறார். வேறு மொழி பெயர்ப்பில் "அழகான காரியம்" என்று கூறப்பட்டுள்ளது. அதற்காக நாம் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும். இந்த நிகழ்ச்சியானது இயேசுவின் பார்வையில் அழகானதாகத் தெரிந்தது. அளவிட முடியாத அன்பானது மிகவும் அழகானது.*

*மாற்கு **14:8**இல் அந்தப் பெண்ணைக் குறித்து இயேசு சொல்லும் போது "இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்" என்று கூறுகிறார். இது மிகவும் எளிதான ஒன்று, ஆனால் மிகவும் முக்கியமானது. நம்முடைய திராணிக்கு மேலாக செய்ய வேண்டுமென்று தேவன் ஒருபோதும் எதிர்பாரார்ப்பதில்லை. நான் அடிக்கடி மக்கள் இவ்வாறு சொல்வதைக் கேட்டிருக்கிறேன். "நான் அதிகமாகச் செய்ய விரும்புகிறேன்''. ஆனால், உண்மையிலேயே அவர்களால் முடிந்ததைச் செய்கிறார்களா? என நான் எனக்குள் கேட்பதுண்டு. தேவன் ஒரு போதும் உங்களுடைய தகுதிக்கு மேல் செய்ய வேண்டுமென்று எதிர்பார்ப்பதில்லை. ஆனால் அப்படி உங்களால் முடிந்ததை நீங்கள் அவருக்குச் செய்யும் போது அந்தப் பெண்ணிடம் எப்படி நடந்து கொண்டாரோ அப்படியே உங்களிடமும் அவர் நடந்து கொள்வார்.*

*மேலும் மாற்கு **14:8**இல் 'நான் அடக்கம் பண்ணப்படுவதற்கு எத்தனமாக என் சரீரத்தில்தைலம் பூச முந்திக் கொண்டாள்' என வாசிக்கிறோம். இது ஒரு ஆச்சரியமான கூற்று ஆகும். அந்த சமயத்தில் சீஷர்கள் யாரும் இயேசு மரித்து அடக்கம்*

பண்ணப்படுவார் என நினைக்கவில்லை. ஆனால் மற்றெல்லா மக்களுக்கும் தெரியாத ஒரு வெளிப்பாடாகிய இயேசு மரித்து அடக்கம் பண்ணப்படுவார் என்பதை மரியாள் அறிந்திருந்தாள். உண்மையில் இயேசு சிலுவையில் மரித்தபோது அவரது உடலுக்குத் தைலம் பூசி அடக்கம் செய்ய அவர்களுக்கு நேரமில்லை. அவரைத் துணிகளில் சுற்றி அவரது உடலில் சில வாசனைத் திரவியங்களை வைத்தார்களே தவிர முறையாக தைலம் பூசி அடக்கம் செய்யவில்லை. அவர்கள் அந்தச் சந்தர்ப்பத்தை இழந்து விட்டார்கள். ஆனால் மரியாளுக்கு பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்தினார். பரிசுத்த ஆவியானவர் அவளது மூளையில் இதனைப் பேசாமல் அவளது இருதயத்தில் பேசினார். பிரஞ்சு மொழியில் ஒரு பழமொழி உண்டு: இருதயத்திற்கு அதற்கான காரணங்கள் உண்டு. ஆனால் அந்தக் காரணங்களுக்கான காரணம் அதற்குத் தெரியாது. அந்தப் பெண்ணைச் சுற்றி அமர்ந்திருந்தவர்களுக்கு இதைக் குறித்துப் புரியாமல் இருந்ததற்கு அந்தப் பெண்ணின் இருதயத்தில் தோன்றிய நினைவுகள் காரணமாக இருந்தன என நான் நினைக்கிறேன்.

மரியாளுக்குக் கிடைத்த மிகப் பெரிய பரிசு மாற்கு **14:9**இல் கூறப்பட்டுள்ளது:

> ***"இந்தச் சுவிஷேசம் உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ அங்கங்கே இவளை நினைப்பதற்காக இவள் செய்ததும் சொல்லப்படும்" என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன் என்றார் (இயேசு)***

இந்தச் செய்தியும் கூட அந்தத் தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றுவதை நினைவுபடுத்துகிறது. ஏனெனில் இந்தச் செய்தியானது வானொலி மூலமாக ஒலிபரப்பப்பட்டு, உலகம் முழுவதிலும் இருந்து மக்கள் கேட்கின்றனர். பல முறைகளில் இதுவும் ஒரு வகையான தீர்க்கதரிசன நிறைவேறுதலாகும்.

# அவளைக் குறை கூறினவர்கள் எப்படி நடந்து கொண்டார்கள்?

கடைசியாக அவளைக் குறை கூறினவர்களின் நடவடிக்கைகள் எப்படி இருந்தன என்பதைக் காண்போம். பொதுவாக மார்க்க சம்பந்தமான மக்களைப் போல இவர்களும் கருமிகளாக இருந்தார்கள். ஆங்கில மொழியில் ஒரு சிறப்பு பழமொழி உள்ளது. "ஆலயத்திலுள்ள எலியைப் போல ஏழையானவர்கள்" என்பர்(Poor as a church mouse). இது உண்மையல்ல. உலகமானது மற்ற எலிகளை விட ஆலயத்திலுள்ள எலிகள் ஏழைகள் எனக் கருதுகிறது. உலகமானது கிறிஸ்தவ சபை மக்களை ஏழைகளாகவும், கஞ்சத்தனமானவர்களாகவும் நினைக்கிறது. அநேக கிறிஸ்தவர்கள் அவ்வாறு நடந்துகொள்வதால் உலகம் அவ்வாறு கருதுகிறது. ஆனால் குறை சொன்னவர்கள் தான் கருமிகளாக இருந்தார்கள். இயேசுவோ மரியாளோ அவ்வாறு இல்லை.

இரண்டாவதாக குறை கூறினவர்கள் மாய்மாலமானவர்களாக இருந்தார்கள். அந்தப் பரிமளத் தைலத்தை மரியாள் ஊற்றிய போது உடனடியாக அவர்கள் ஏழைகள் மீது கரிசனை உள்ளவர்களாக மாறுவதைக் காண்கிறோம். இதுவரையிலும் ஏழைகளுக்கு அவர்கள் அதிகம் செய்தார்களா? அல்லது இந்தச் சம்பவத்திற்குப் பின்பு அவர்கள் ஏழைகளுக்கு அதிக உதவி செய்தார்களா? என்பது ஒரு முக்கியமான கேள்வி.

மூன்றாவதாக அவர்கள் பரிதபிக்கப்படத்தக்க மக்களாயிருந்தார்கள். அவர்கள் அந்தத் தைலத்தின் நறுமணத்தைக் கூட நுகர்ந்து அனுபவிக்கவில்லை. அந்த வீடு முழுவதும் வாசனையால் நிறைந்திருந்தது. அவர்கள் கோபமாகவும் குறை கூறிக் கொண்டுமிருந்தபடியால் அந்த உன்னதமான வாசனையை அவர்களால்

அனுபவிக்கக் கூடாமலிருந்தது.

தேவனுடைய அந்த அபரிமிதமான அன்புக்கு நாம் எவ்வாறு பிரதி உபகாரம் செய்வோம் என்பது குறித்து இந்தப் பகுதியை நாம் முடிக்கும் முன்பாக நான் உங்களிடம் ஒரு தனிப்பட்ட கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். இயேசுவுக்கு உங்களுடைய அர்ப்பணிப்பு அபரிமிதமானதாக இருக்குமாறு பரிசுத்த ஆவியானவர் உங்கள் இருதயங்களைத் தூண்டியிருக்கிறாரா?

இயேசு பரலோகத்திலுள்ளபடியால் அவருக்கு நேரடியாக நீங்கள் எதுவும் செய்ய முடியாது. ஆனால் மரியாளைப் போல இயேசுவின் சரீரமாகிய சபைக்கு (மக்களுக்கு) நீங்கள் ஏதாவது செய்ய முடியும்.

இந்தச் செய்தியும் உலகத்தின் பல பாகங்களுக்கு ஒலிபரப்பப்படுகிறது. சீனா, இந்தியா, ஆப்பிரிக்காவின் பகுதிகள், மத்திய மற்றும் தென் அமெரிக்கா, தீவுக்கூட்டங்கள், ஐரோப்பாவின் பகுதிகள் மற்றும் ஆசியா, இதைக் கேட்பவர்களில் பலர் அமெரிக்கர்களின் தகுதியோடு ஒப்பிடும்போது அவர்கள் மிகவும் ஏழைகள். இவர்கள் படுக்கையில் விரிப்புகள் இருப்பதில்லை. அநேகருக்கு படுக்க படுக்கையே இல்லை. ஒரு குடிசையில் ஒரு பாயில் படுத்திருப்பார்கள். அவர்களுக்குக் காலில் காலணிகள் கூட இல்லை. அநேகருக்கு அவர்கள் விரும்பி உண்ணும் உணவு கூட கிடைப்பதில்லை. நாம் இதைச் சாப்பிடவா அதைச் சாப்பிடவா என யோசிக்கும் நிலையில் இந்த உலகத்தில் அநேக மக்களுக்கு அவ்வித நிலை இல்லை என்பதை நாம் உணருவதில்லை. அநேக மக்களுக்குச் சாப்பிட உணவே இல்லை.

இப்படிப்பட்ட மக்களுக்கு நீங்கள் உதவும்போது இயேசுவின் சரீரத்திற்கு ஏதாவது செய்கிறீர்கள். பரிசுத்த ஆவியானவர் உங்கள் உள்ளத்தைத் தொடும்போது நீங்கள் மரியாளைப் போல செயல் படுவீர்களா?

அபரிமிதமாக நீங்கள் நடந்து கொள்ள தைரியமாக முயற்சி செய்வீர்களா? உங்களிடம் உள்ள சாதாரணமானவற்றிலிருந்து எடுத்துச் செய்ய முன் வருவீர்களா? மார்க்கத்தில் ஊறிப்போன மக்கள் குறை கூறுவார்கள். ஆனால், இயேசு உங்களைப் பாராட்டுவார் என்பதை மறந்து விடாதீர்கள்.

# ஆசிரியரைப்பற்றி. . .

டெரிக் பிரின்ஸ் இந்தியாவில் பெங்களூர் பட்டணத்தில் பிரிட்டிஷ் தம்பதியருக்குப் பிறந்தார். பிரிட்டனிலுள்ள பிரசித்தி பெற்ற கல்வி நிறுவனங்களான ஈட்டன் கல்லூரி மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் படித்து கிரேக்கம் மற்றும் இலத்தீன் மொழிகளில் புலமை பெற்றார். **1940** முதல் **1949** வரை கேம்பிரிட்ஜ்ஜில் உள்ள கிங்ஸ் கல்லூரியில் புராதன மற்றும் நவீன தத்துவம் என்ற துறையில் பேராசியராக இருந்தார். அராமியம் மற்றும் எபிரெய மொழியை கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்திலும் எருசலேமிலுள்ள எபிரெய பல்கலைக் கழகத்திலும் கற்றார். மேலும் இவர் உலகத்திலுள்ள பல நவீன மொழிகளைப் பேசும் ஆற்றல் உள்ளவர்.

இரண்டாம் உலகப் போரின் ஆரம்பத்தில் பிரிட்டிஷ் இராணுவத்தில் மருத்துவமனை ஊழியராகப் பணி புரிந்தபோது தன் வாழ்க்கையை மாற்றிய இயேசுவை நேருக்கு நேர் சந்திக்கும் அனுபவத்தைப் பெற்றார். அதைக் குறித்து அவர் பின்வருமாறு கூறுகிறார்:

இந்த இயேசுவின் சந்திப்பினால், என்னில் ஆழமாக இரு கருத்துக்கள் பதிந்துவிட்டன: முதலாவது இயேசு ஜீவிக்கிறார் என்பது. இரண்டாவது வேதாகமம் என்றும் மாறாதது; எக்காலத்திற்கும் பொறுத்தமுள்ளது; தற்காலத்தில் நாம் பின்பற்ற வேண்டிய கருத்துக்களைக் கொண்ட நூல் என்பதாகும்.

இரண்டாம் உலகப் போரின் முடிவில் பிரிட்டிஷ் இராணுவம் இவரை எங்குப் பணியில் வைத்திருந்ததோ அங்கேயே தொடர்ந்து தங்கியிருந்தார். அந்த இடம்

எருசலேம் பட்டணமாகும். லிடியா என்பவரை மணந்ததன் மூலம் லிடியாவின் குழந்தைகள் இல்லத்தில் வாழ்ந்த எட்டு பிள்ளைகளுக்கு இவர் வளர்ப்புத் தந்தையானார். இவர்கள் குடும்பமாக 1948ல் இஸ்ரவேல் நாடு உருவாவதைக் கண்டு களித்தனர். கென்யாவில் கல்வியாளராகப் பணிபுரிந்தபோது லிடியாவும் பிரின்ஸும் ஆப்பிரிக்கப் பெண்குழந்தை ஒன்றை ஒன்பதாவது குழந்தையாகத் தத்தெடுத்தனர். 1975ல் லிடியாவின் மரணத்திற்குப் பின் 1978ல் பிரின்ஸ் மறுமணம் செய்தார். லிடியாவைப் போல் ரூத்தையும், அவர்கள் எருசலேம் பட்டணத்தில் ஆண்டவருடைய ஊழியம் செய்து கொண்டிருந்த போது சந்தித்தார். ரூத்தின் பிள்ளைகள் மூவருடன் அவர்களுடைய குடும்பத்தின் உறுப்பினர்கள் பன்னிரண்டு பேராயினர். மேலும், அவர்களுக்கு அநேகப் பேரப்பிள்ளைகளும், அவர்களுடைய பிள்ளைகளுமாக அவர்கள் குடும்பம் பெரியதானது.

இவரது சபைப் பாகுபாடற்ற நிலையினால் பலதரப்பட்ட இன, மத மக்கள் மத்தியிலும் இவர் பிரசங்கிக்க வழிவாசல் திறக்கப்பட்டது. நமது காலத்தில் சர்வதேச அளவில் சிறந்த வேத விற்பன்னராக அங்கீகரிக்கப்பட்டுள்ளார். இன்றைக்கு டெரிக் பிரின்ஸுடன் **(Today with Derek Prince)** என்ற தினந்தோறும் ஒலிபரப்பப்படும் வானொலி நிகழ்ச்சி உலகத்தின் பாதிக்கு மேல் உள்ள மக்கள் அரபி, ஐந்து சீன மொழிகள் (மண்டாரின், அமாய், கேன்டோனிஸ், ஷாங்கையீஸ், ஸ்வேடோ,) மங்கோலியன், ஸ்பேனிஷ், ரஷ்யன்,டோங்கன் ஆகிய மொழிகளில் கேட்கின்றனர். இவர் 50 புத்தகங்களுக்கு மேல் எழுதியுள்ளார், 500 ஒலி நாடாப் போதனைகளையும், 160 வீடியோ போதனைகளையும் வழங்கியுள்ளார். இவை அறுபதிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

'உலகளாவிய தலைவர்களின் அமைப்பு' (Global Outreach Leaders Programme) என்ற டெரிக் பிரின்ஸ்

ஊழியங்களின் மூலமாக இவரது புத்தகங்களும் ஒலி நாடாக்களும் மூன்றாவது உலக நாடுகள் கிழக்கு ஐரோப்பா, ரஷ்யா ஆகிய நாடுகளிலுள்ள கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவசமாக அனுப்பிவைக்கப்படுகின்றன. 2003ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் எருசலேம் பட்டணத்தில் வைத்து கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

டெரிக் பிரின்ஸ் ஊழியங்களின் தலைமையிடம் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் வட கரோலினா மாகாணத்திலுள்ள சார்லட் பட்டணத்தில் அமைந்துள்ளது. இதன் கிளை அலுவலகங்கள் ஆஸ்திரேலியா, கனடா, ஜெர்மனி, ஹாலந்து, நியூசிலாந்து, தென்னாப்பிரிக்கா, தென்னிந்தியா மற்றும் பிரிட்டனில் அமைந்துள்ளன.

| | |
|---|---|
| நாம் மன்னிக்கப் படும்படி | இயேசு தண்டிக்கப்பட்டார் |
| நாம் சுகம் பெறும்படி | இயேசு காயப்பட்டார் |
| அவருடைய நீதியினால் நாம் நீதியாகும்படி | இயேசு நமது பாவங்களினால் பாவமாக்கப்பட்டார் |
| நாம் அவருடைய வாழ்வை வாழும்படி | அவர் நமது மரணத்தை அடைந்தார் |
| அவருடைய பரிபூரணத்தில் நாம் பங்குகொள்ளும்படி | இயேசு நமது வறுமையை ஏற்றுக் கொண்டார் |
| நாம் அவருடைய மகிமையில் பங்கு கொள்ள | இயேசு இகழப்பட்டார் |
| பிதா நம்மை ஏற்றுக் கொள்ளும்படியாக | அவர் நம் நிமித்தம் ஒதுக்கி தள்ளப்பட்டார் |
| நாம் ஆசீர்வாதத்தைப் பெறும்படி | இயேசு சாபமானார் |

# OTHER TAMIL BOOKS BY DEREK PRINCE

1) ஞானஸ்நானத்தின் மூலம் அடக்கம்பண்ணப்படுதல்
2) தெய்வீக பரிமாற்றம்
3) பிசாசுகளை துரத்துதல்
4) தேவனின் அளவற்ற பேரன்பு
5) வாழ்வளிக்கும் விசுவாசம்
6) தியான வாழ்கைக்கான அடித்தளங்கள்
7) தேவனின் மருந்து புட்டி
8) உங்கள் பணத்தை குறித்த தேவனுடைய திட்டம்
9) விட்டுக்கொடுத்தலின் கிருபை
10) உங்களில் உள்ள தூய ஆவியானவர்
11) சாபத்திலிருந்து ஆசீர்வாதத்திற்கு கடந்து வருவது எப்படி?
12) தேவனின் சிறப்பு ஈவினை நீங்கள் விரும்பினால்
13) வாழ்வை மாற்றும் ஆவிக்குரிய ஆற்றல்
14) வாழ்க்கையின் கசப்பான ஊற்று
15) லூசிஃபரின் சுயரூபம்
16) அறிக்கையிடுதலின் ஆற்றல்
17) சுயமாய் வேதத்தை கற்பதற்கான பாடங்கள்
18) ஆவிக்குரிய போராட்டம்
19) சோதிக்கப்படுதல்
20) அவர்கள் பிசாசுகளை துரத்துவார்கள்
21) அனாதைகள், விதவைகள், ஏழைகள், ஒடுக்கப்பட்டோர்.....
22) பரிசுத்த ஆவியானவர் என்பவர் யார்?

மற்றும் எங்களிடம் ஆங்கிலம், கன்னடம், தெலுங்கு, மலையாளம், குஜராத்தி, மராத்தி, ஒரியா, பஞ்சாபி, நேபாளி போன்ற புத்தகங்களும் உள்ளன. பட்டியலுக்குத் தொடர்பு கொள்ளவும்:

**DEREK PRINCE MINISTRIES - INDIA**

**C/o DPM IMPEX**

**1C, EVR Road, Puthur,**

**Trichy - 620 017, Tamil Nadu, India.**

**E-mail: admin@derekprince.in**

**Phone : 00-91-98430 55414 / 95855 38205**